சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.96/2019

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.P.பொன்னுத்தாய் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – மஞ்சுளா (Dw2) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். நான் உதவி மேலாளராக தாட்கோவில் பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். 1 ம் பிரதிவாதி இந்திரா எங்கள் நிறுவனத்தில் சொத்து வாங்குவதற்காக NSFTC ன் கீழ் கடன் ரூ.21,780/– வாங்கியுள்ளார். அதற்காக தாட்கோ மேலாளர் 10.03.2008 ல் பிறப்பித்த செயல்முறை ஆணை. அது **சா.சா.ஆ 1**. 19.12.2007 ல் தாட்கோ மேலாளர் கடன் பெறுபவர்களுக்கு நிபந்தனையுடன் கூடிய செயல்முறை ஆணை பிரதிவாதிக்கு பிறப்பித்துள்ளார். அது **சா.சா.ஆ 2**. சா.சா.ஆ 2 ல் 6 வது காலத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனையின் படி பிரதிவாதி கிரையம் பெற்ற அசல் பத்திரத்தை எங்கள் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும், அதற்கு ஆதரவாக எங்கள் அலுவலகத்தில் Deposit of Title Deeds பதிந்து கொடுக்க வேண்டும் என்றும், கிரையம் பெற்ற பிரதிவாதி சொத்தை 10 வருடங்களுக்கு வேறு நபர்களுக்கு விற்கவோ, ஈடு செய்யவோ முடியாது என்றும்

நிபந்தனையுடன் கடன் வழங்கப்பட்டுள்ளது. 26.12.2007 ல் கிரையம் பெற்ற பின்னர் எங்கள் அலுவலகத்தில் இருந்து காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அது **சா.சா.ஆ 3**. மேற்படி இந்திரா கடனை கட்டி முடித்துவிட்டாரா என்றால் இல்லை. வட்டி மற்றும் அபதார வட்டியும் அவர் கட்டி முடிக்கவில்லை. பிரதிவாதி எங்கள் அலுவலகத்திற்கு 01.09.2008 ம் தேதி தாவா சொத்துக்களை கொடுத்து எழுதிக்கொடுத்த பதிவு அடமான பத்திரம் **சா.சா.ஆ 4**. தாட்கோ மூலம் வாங்கப்பட்ட சொத்துகள் சம்பந்தமாக வேறு எதுவும் வில்லங்கம் ஏற்படுத்தினால் அது செல்லாது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

தாவா வழக்கு சொத்தை பொறுத்து தாட்கோவின் நிபந்தனை படி 10 வருடங்களுக்கு உட்பட்டு அதை விற்பனை செய்ய இயலாது என்றால் சரிதான். சா.சா.ஆ 3 கடிதம் சார்பதிவாளருக்கு போய் சேர்ந்ததா அல்லது அதை அவர் பெற்றுக்கொண்டாரா என்பதற்கான ஒப்புகை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாட்கோவில் பெற்ற கடனை 1ம் பிரதிவாதி திரும்ப செலுத்தாத நிலையில் அவரிடமிருந்து அதை வசூல் செய்வதற்கு நடவடிக்கை எதுவும் தாட்கோவின் மூலம் எடுக்கவில்லை. அதற்கான ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி கடனை செலுத்தாத நிலையில் கடனை திரும்ப செலுத்தக் கோரி தாட்கோ மூலம் சட்டப்பூர்வ அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை. 1ம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு வருடம் தோறும் இரு தவணைகளில் 10 வருடங்களுக்கு கடனை திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் ஆவார்.

எத்தனை தடவை தவணை கட்டத்தவறினால் அவர் தவணை கட்டத்தவறிய கடன்காரர் என்று முடிவுக்கு வருவோம் என்றால் ஒரு தவணை கட்டத்தவறினாலே அவர் தவணை கட்டத்தவறிய கடன்காரர் ஆவார். கடன் பெற்றவர் 10 வருட காலத்திற்குள் சொத்தினை விற்பனை செய்துள்ளாரா

என்பதை நாங்கள் மேற்பார்வை செய்யமாட்டோம். 1ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் எங்களது நிபந்தனைக்கு கட்டுப்பட்ட ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் வாதியிடம், 1 ம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு வாதிகள் தாவா சொத்தின் மீது வழக்கிட உரிமைபடைத்தவர் என்றால் சரியல்ல. 10.11.2009 ம் வருடம் பெற்ற கடன் தொகையானது தற்போது 10 வருடங்களுக்கு மேலாகி விட்டதால் அந்த கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான தாவா பிராது சொத்துக்களின் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தாட்கோவின் நிபந்தனைகள் எதுவும் தடையாக இருக்க முடியாது என்றால் சரியல்ல. கடன்காரர் அசல் மற்றும் வட்டி, அபராத வட்டி ஆகியவற்றை கட்டிய பின்பு தான் கிரையப் பத்திரத்தை அவர் வசம் கொடுப்போம். மேற்படி சங்கதிகள் சார்பதிவாளருக்கோ, பயனாளிக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் சா.சா.ஆ 1 மற்றும் சா.சா.ஆ 3 ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.